அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை–600 006.

ந.க.எண். 03/Conf./2018 நாள் : 12.06.2018

## சுற்றறிக்கை

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு)/ இடைநிலைத் தேர்வெழுதும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் வினாத்தாள் குறித்த தெளிவுரை வழங்குதல்–சார்ந்து

–––––

மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு) / இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வினை எதிர்கொள்ளும் வகையிலும், அரசின் போட்டித் தேர்வினை எதிர்கொள்ளும் வகையிலும் புத்தகத்தின் கருத்துக்களை நன்கு படித்துணர்ந்து அதனடிப்படையில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் பாட ஆசிரியர்கள் மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும்.

**மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு)**

1. மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டிற்கு வினாத்தாள் கட்டமைப்பு இல்லாத நிலையில், ஆசிரியர்கள், புத்தகத்தின் உள்ளிருந்து கேட்கப்படும் வினாக்கள், கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வினாக்கள் (Creative) மற்றும் பாடம் சார்ந்து கேட்கப்படும் உயர்திறன் சார்ந்த சிந்தித்து விடையளிக்கும் (Higher order thinking)வகையில் அமையும் வினாக்கள் ஆகியவற்றிற்கும் விடையளிக்கும் வகையில் மாணவர்களைத் தயார்படுத்த வேண்டும்.

2. 2018–2019–ம் கல்வி ஆண்டில் பயிலும் மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு வினாத்தாளில் தோராயமாக 20% வினாக்கள் (ஒரு மதிப்பெண்/ சிறுவினா/குறுவினா / நெடுவினா) Creative மற்றும் Higher order thinking வகையில் அமையும் என்பதால் அதற்கு ஏற்றாற்போல் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

3. மேலும், பாடவேளைகளின் அடிப்படையில் (No.of periods allotted) தோராயமாக பாடப்பகுதிகளுக்கு மதிப்பெண் பிரித்தளிக்கப்படும்.

4. மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கான மாதிரி வினாத்தாள் ஜூலை முதல் வாரத்தில் அனுப்பப்படும்.

**<u>பத்தாம் வகுப்பு :-</u>**

பத்தாம் வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில் அனைத்துப் பாடங்களிலும் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டுள்ள வினாக்கட்டமைப்பின்படி வினாத்தாள் அமையும். மேலும் டிசம்பர் 2017–ல் நடைபெற்ற அரையாண்டுத் தேர்வு மற்றும் மார்ச் 2018–ல் நடைபெற்ற பொதுத் தேர்வில் கேட்கப்பட்ட வினாத்தாளின் அடிப்படையிலேயே இனி வருங்காலங்களில் வினாத்தாள் அமையும்

எனவே, கடந்த பருவங்களில் வெளியான வினாக்களின் தொகுப்பினை மட்டும் படித்தால் முழு மதிப்பெண் பெறமுடியாது என்பதனை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தி பாடத்தின் உட்கருத்தினை புரிந்து கொண்டு படிக்குமாறும், பாட ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

**<u>முக்கிய குறிப்பு :-</u>**

மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு/இடைநிலைப்பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள், வினாத்தாளில் குறிப்பிட்டுள்ள குறிப்புகளை நன்கு படித்தப்பின் தேர்வெழுத அறிவுறுத்த வேண்டும். **'மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக'** என்ற தலைப்பில் இடம் பெறும் வினாக்களுக்கு, வினா எண் குறியீட்டுடன், விடையினையும் சேர்த்து எழுதினால் மட்டுமே உரிய மதிப்பெண்கள் வழங்கப்படும் எனவும் குறியீடு மட்டுமோ அல்லது விடை மட்டுமோ எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கப்பட மாட்டாது எனவும் அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். மேலும், விடைத்தாள் முழுமைக்கும் நீலம் அல்லது கருப்பு மையில் ஏதேனும் ஒன்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தலைப்புகள், வினாக்களுக்கு மட்டும் கருப்பு மையினைப் பயன்படுத்துவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். இம்முறையினை பள்ளிகளில் நடைபெறும் தேர்வுகளிலேயே கடைப்பிடிக்க மாணவர்களை தயார்படுத்த வேண்டும்.

**இயக்குநர்**

**பெறுநர்**

1. அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக)
2. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவர்கள்/ மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்.
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்

**நகல் :**

1. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கழகம், சென்னை–6.